# அரசாங்க அறிவித்தல்கள்

## 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்

## 5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசின் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான்,

> 2019 செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 2143/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இ.ப. தலைப்பு இலக்கம் 03.02 மற்றும் 03.03 ஆகியவற்றின் கீழ் வரும் மீன் (இ.மு.குறியீடு 0303.54 இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மக்கரல் மீன் நீங்கலாக) இறக்குமதிக்கு ஏற்புடைமையாகும் 10% அல்லது கிலோ கிறாம் ஒன்றுக்கு 100.00 ரூபா ஆகிய விசேட வியாபாரப் பண்ட அறவீட்டில் இருந்து கிலோ கிறாம் ஒன்றுக்கு 25.00 ரூபாவை அறவீடு செய்த பின்னர் எஞ்சிய பெறுமதி விலக்களிக்கப்படல் வேண்டும் என இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

இக் கட்டளையின் பிரகாரம் மீன் (இ.ப. தலைப்பு இலக்கம் 03.02 மற்றும் 03.03 ஆகியவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மீன், இ.மு.குறியீடு 0303.54 இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மக்கரல் மீன் நீங்கலாக) இறக்குமதி மீது விசேட வியாபாரப் பண்ட அறவீடாக கிலோ கிறாம் ஒன்றுக்கு 25.00 ரூபா, 2020 பெப்பிரவரி மாதம் 07 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் 03 மாதங்களுக்காக அறவிடப்படல் வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை
அபிவிருத்தி அமைச்சர்

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01.
2020 பெப்பிரவரி 06.